Kanton Zürich
Direktion der Justiz und des Innern
Fachstelle Integration

# FI-Bulletin

## ஆலோசனை நிலையங்கள் & ஹொட்லைன்

ஏப்ரல் 30, 2020

மதிப்புக்குரிய பெரியோர்களே தாய்மார்களே!

சூறிச் மாநிலத்திலுள்ள ஆலோசனை நிலையங்கள் கொறோனா நெருக்கடி காலத்திலும் கூட உங்களுக்காக தொலைபேசி மூலம் தொடர்ந்தும் சேவையிலுள்ளது. சூறிச் மாநிலத்திலுள்ள முக்கியமான ஆலோசனை நிலையங்களின் தொகுப்பொன்றை நீங்கள் இங்கே காண்கின்றீர்கள். இதில் அவர்கள் ஆலோசனை வழங்கும் தலைப்புக்கள் மற்றும் மொழிகள் அடங்கிய தகவல்களுள்ளன.

## விசேடமாக குடிபெயர்வுடன் கூடிய ஆலோசனைகள்

➔ இன்வோடோனா: (Infodona): 044 412 84 00

*இன்போடோனா* கீழ்வரும் விடயங்களில் கட்டணமின்றி ஆலோசனைகளை வழங்குகின்றது: கொறோனா வைரஸ் தொடர்பாக எடுக்கப்படும் சகல தகவல்கள் பற்றியும், சூறிச் இல் வாழ்க்கை, திருமண வாழ்வும் குடும்பமும், சட்டம், நிதி, தொழில் மற்றும் சுகாதாரம். சூறிச் இலுள்ள குடிபெயர்ந்தவர்களுக்கான ஆலோசனை நிலையம் 16 மொழிகளில் தகவல்களை வழங்குகின்றது:

ஜேர்மன், அல்பேனிய மொழி, அரேபிய மொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலிய மொழி, குறேசிய மொழி, போர்த்துக்கேய மொழி, சேர்பிய மொழி, ஸ்பானிய மொழி, தமிழ், துருக்கிய மொழி, ஸ்லோவாக்கிய மொழி, றஸ்ஸிய மொழி, குர்தீஸ் மொழி (சொறானி) மற்றும் ருக்மேனிஸ் (ஈராக்).

➔ வின்ரர்தூர் இலுள்ள குடிபெயர்ந்தவர்களுக்கான ஆலோசனை – Beratung für Migrantinnen und Migranten für Winterthur und Umgebung: 052 267 36 93

குடிபெயர்ந்தவர்களுக்கான குடிபெயர்வு மற்றும் ஒன்றிணைந்து வாழ்தல் பற்றிய விசேட தலைப்புக்களுடன் கூடிய விடயங்கள் மற்றும் கொறோன சம்பந்தமான நட-வடிக்கைகள் பற்றி தாய்மொழியில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வின்ரர்தூர் இலுள்ள குடிபெயர்ந்தவர்களுக்கு இது இலவசமாகும் என்பதுடன் இவை கீழ்வரும் மொழிகளில் வழங்கப்படுகின்றன:

அல்பேனிய மொழி, அரேபிய மொழி, அஹ்மாறிய மொழி, பல்கேரிய மொழி, பொஸ்னிய மொழி, ஆங்கிலம், இத்தாலிய மொழி, குர்தீஸ் மொழி, ஸ்பானிய மொழி, போர்த்துக்கேய மொழி, சேர்பிய மொழி, குறேசிய மொழி, மஸடோனிய மொழி, ரிக்ரீனிய மொழி மற்றும் துருக்கிய மொழி.

➔ சூறிச் நகரில் ஒருங்கிணைந்த வாழ்வை ஊக்குவித்தல் – Integrationsförderung Stadt Zürich: 044 412 37 37

சூறிச் நகரில் ஒருங்கிணைந்த வாழ்வை ஊக்குவித்தல் என்ற அமைப்பு குடிபெயர்வு மற்றும் ஒருங்கிணைந்து வாழ்தல் பற்றிய வினாக்களுக்கு கீழ்வரும் மொழிகளில் இலவசமாக ஆலோசனைகளை வழங்குகின்றது:

ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, கிரேக்க மொழி, இத்தாலிய மொழி, போர்த்துக்கேய மொழி மற்றும் ஸ்பானிய மொழி. இச் சேவை சூறிச் நகரில் வசிப்பவர்களை இலக்காகக் கொண்டுள்ளது.

➔ மிர்ஸாஹ் MIRSAH: 044 291 00 15

இவ் ஆலோசனை நிலையம் குடிபெயர்வு மற்றும் ஒன்றிணைந்து வாழ்தல் பற்றிய சட்ட ரீதியான வினாக்களுக்கான தகவல்களை வழங்குகின்றது (உதாரணமாக வதிவிட உரிமை, குடும்ப அங்கத்தவர்களை அழைத்தல், தொழில் அனுமதிப்பத்திரம், புகுமுக அனுமதி (விசா), குடியுரிமை பெறல் போன்றன). விசேட நிபுணத்துவம் வாய்ந்த சட்டவாளர்கள் வெளிநாடவர் சட்ட உரிமைகள் பற்றிய வினாக்களுக்கு தகுதிவாய்ந்த சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

இவ் ஆலோசனைக்கான செலவு ஒரு மணித்தியாலத்துக்கு 50 பிராங்க் என்பதுடன் கீழ்வரும் மொழிகளில் இது வழங்கப்படுகின்றது: ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, குர்தீஸ் மொழி, ஸ்பானிய மொழி மற்றும் துருக்கிய மொழி.

➔ சூறாஸ் ZüRAS: 044 415 62 26

இனவெறி தொடர்பான *சூறாஸ் எனப்படும்* சூறிச் தொடர்பு நிலையம், வேலைத்தலத்தில், வதிவிட அயலவரிடத்தில் அல்லது ஓய்வுநேரங்களில் அவர்களது பூர்வீகம், தோல்நிறம் அல்லது சமயம் காரணமாக பாகுபாடு காட்டப்படல் மற்றும் இனவெறியால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான ஆலோசனைகளை வழங்குகின்றது. சூறிச் மாநிலத்தில் வசிப்பவர்களுக்கு இலவச ஆலோசனையானது குறைந்தது 9 மொழிகளில் வழங்கப்படும்:
ஆங்கிலம்இ ஃபிரெஞ்ச்இ ஜெர்மன்இ இத்தாலியன்இ ஸ்பானிஷ்இ போர்ச்சுக்கீஸ்இ ஸ்வீடிஷ்இ ஹங்கேரியன் மற்றும் பாரசீக மற்றும் பிற மொழிகள் தேவைப்பட்டால்.

➔ ஸ்பாஸ் SPAZ: 043 960 87 77

சூறிச் சான்ஸ்-பப்பியர்ஸ் (Sans-Papiers) தொடர்பு நிலையம் எனப்படும் *ஸ்பாஸ்* நிரந்தர வதிவிட அனுமதி அந்தஸ்து இல்லாத குடிபெயர்ந்தவர்களுக்கு, சமூகம் மற்றும் சட்ட உரிமைகள் பற்றிய வினாக்களுக்கு கீழ்வரும் மொழிகளில் இலவச ஆலோசனை வழங்குகின்றது:

ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, மற்றும் ஸ்பானிய மொழி.

## பொதுவான ஆலோசனைகள

→ மிக அவசர ஆலோசனை: **SOS-Beratung des SRK: 044 360 28 53**

அனுபவம் வாய்ந்த பெண் சமூக ஆலோசகர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கடினமான சூழ்நிலையிலுள்ள அவசர உதவி தேவைப்படும் நபர்களுக்கு ஆலேசனை வழங்குகின்றனர். இது அர்களின் பூர்வீகம் மற்றும் வதிவிட அந்தஸ்தில் தங்கியிராது மேற்கொள்ளப்படுகின்றது. இச் சேவை- யானது சூறிச் மாநிலத்தில் வசிப்பவர்களை இலக்காக் கொண்டுள்ளது. இவ் ஆலோசனை வழங்கலுக்கு கட்டணம் இல்லை என்பதுடன் இது கீழ்வரும் மொழிகளில் வழங்கப்படுகின்றது:

ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலிய மொழி மற்றும் ஸ்பானிய மொழி.

→ **கறிற்ராஸ் சமூகநல மற்றும் கடன் சம்பந்தமான ஆலோசனை Caritas Sozial- und Schuldenberatung: 044 366 68 28**

கறிற்ராஸ் சூறிச் இன் சமூகசேவை பணியாளர்கள் சூறிச் மாநிலத்திலுள்ள குறைந்த பணமுள்ளவர்கள், ஏழ்மையில் வாழ்பவர்கள் அல்லது கடன் உள்ள நபர்களுக்கு ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

இவ் ஆலோசனைகள் இலசவம் என்பதுடன் ஜேர்மன் மொழி- யில் மேற்கொள்ளப்படுகின்றன.

## சுகாதாரம் பற்றிய வினாக்களுக்கு ஆலோசனைகள

→ மருத்துவர் தொலைபேசி **Ärztefon: 0800 33 66 55**

24 மணி நேரமும் கொறோனா வைரஸ் பற்றிய அவசர அழைப்பு இலக்கம்.

→ மெடிரிறீனா **MEDITRINA: 044 360 28 72**

*மெடிரிறீனா* என்பது சுவிற்ஸர்லாந்தில் வதிவிட உரிமையின்றி தங்கிய- ிருக்கும் நபர்களுக்குரிய ஒரு மருத்துவ தொடர்பு நிலையமாகும். இவர்களுக்கு மருத்துவக் காப்புறுதி எதுவுமில்லை. சகல ஆலோசனைகள் மற்றும் அடிப்படை மருத்துவ பராமரிப்புக்கள் *மெடிரிறீனா* இல் இலவசமாக கீழ்வரும் மொழிகளிலும் வழங்கப்படுகின்றன:

ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு இத்தாலிய மொழி மற்றும் ஸ்பானிய மொழி. தெளிவுபடுத்தல்கள் மற்றும் சிகிச்சைகள் வெளியிடங்களில் நடைபெறுமாயின் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

மாநில ஒருங்கிணைப்புக்கான நிபுணத்துவ நிலையத்தின் இணையத் தளத்தில் (Website) நீங்கள் தகவல் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## கொறோன-நெருக்கடி தொடர்பான ஆலோசனைகள

→ அகதிகளுக்கான AOZ-*ஹொட்லைன்* - **AOZ-Hotline für Geflüchtete:**

கொறோனா நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட புதிதான சமூக முன்னேற்பாடுக்ள பற்றிய தகவல்களை தாய்மொழி பேசும் ஆலோசகர்கள் 11 மொழிகளில் வழங்குகின்றனர்:

அரேபிய மொழி, பாடினி, ஃபார்ஸி, உருது, ஆங்கிலம், பிரெஞ்சு, குர்மாஞ்சி, துருக்கிய மொழி, தமிழ் மற்றும் ரிக்றீனிய மொழி. அகதிகளுக்கான ஆலோசனை வழங்கல் கட்டணமின்றி வழங்கப்படுகின்றது.

→ **HEKS**-தொலைபேசி உதவி: **044 360 88 55**

கொறோனா நெருக்கடியின் பொழுது தமது நாளாந்த கடமை- களைச் சமாளிப்பதற்கு செய்வதறியாது திண்டாடும் மக்களுக்கு அனுபவம் நிறைந்த சமூக சேவையாளர்கள் தொலைபேசி மூலமான ஆலோசனைகளை வழங்குகின்றனர். இச் சேவைக்கு கட்டணம் இல்லை என்பதுடன் இது சூறிச் மாநிலத்தில் வசிப்பவர்களை இலக்காக் கொண்டுள்ளது. ஆலோசனை வழங்கல் தற்பொழுது ஜேர்மன் மொழியில் மட்டுமே நடைபெறுகின்றது.

தொலைபேசியில் **0800 266 785** இல் 10 மொழிகளில் பதிலளிக்கப்படும்:

அல்பேனிய, அரபு, போஸ்னியன் / குரோஷியன் / செர்பியன், குர்திஷ், பார்சி, போர்த்துகீசியம், ஸ்பானிஷ், தமிழ், டிக்ரின்யா, துருக்கியம்.

→ கொறோனா பயிற்ச **COACHING CORONA:**

நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியளார்கள், மத்தியஸ்தர்கள் மற்றும் உளவியல் நிபுணர்கள் தற்போதைய நிலையில் செய்வதறியாது திண்டாடும் மக்களுக்கும் கலந்துரையாடலொன்று தேவைப்படும் மக்களுக்கும் ஆலோசனை வழங்குகின்றனர். இதில் பாதிக்கப்பட்டவர்களாக, உறவினர்கள், பயிற்றுவிக்கப்பட்ட சுகாதாரத்துறைப் பணியாளர்கள், பெற்றோர் மற்றும் குடும்பத்தினரும் கூட.

தொலைபேசி மூலமாக ஆலோசனைக் கலந்துரையாடல்கள் ஜேர்மன், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடை பெறுவதுடன் 2020 ஆடி மாத இறுதி வரை இலவசமாகும்.

## ஹொட்லைன்ஸ

→ கொறோன வைரஸ் ஹொட்லைன **Coronavirus-Hotline: 0800 044 117**

சூறிச் மாநிலத்தில் தொற்று பற்றிய சகல வினாக்களுக்கும் சூறிச் மாநிலத்தின் தொலைபேசியூடான தகவல் சேவை (*இன்போலைன்*). தினமும் 7 - 23 மணி.

→ *இன்போலைன்* கொறோனா வைரஸ **Infoline Coronavirus: 058 463 00 00**

சுகாதாரத்துறைக்கான மத்திய கூட்டாட்சி அலுவலகம் சுவிற்ஸர்லாந்தின் தொற்று பற்றிய 24-மணித்தியால *இன்போலைன்*. மருத்துவ ஆலோசனை இல்லை.